raising children network
the australian parenting website

# பன்மொழி மற்றும் இருமொழிக் குழந்தைகள்: பலன்களும் சவால்களும்

பொருந்துவது
0-18
வயதினர்

https://raisingchildren.net.au/newborns/connecting-communicating/bilingualism-multilingualism/bilingualism

**முக்கியப் புள்ளிகள்**

- **நீங்கள் இருமொழிக்காரர் எனில், நீங்கள் இரண்டு மொழிகளைப் பயன்படுத்துகிறீர்கள். நீங்கள் பன்மொழிக்காரர் எனில், நீங்கள் இரண்டுக்கு மேற்பட்ட மொழிகளைப் பயன்படுத்துகிறீர்கள்.**
- **பன்மொழி அல்லது இருமொழிக் குழந்தையை வளர்ப்பது பல நன்மைகளைக் கொண்டுள்ளது. உதாரணமாக, இதனால் வலுவான குடும்ப மற்றும் கலாச்சாரப் பிணைப்பை உருவாக்க முடியும்.**
- **பன்மொழி அல்லது இருமொழிக் குழந்தையை வளர்ப்பதில் சவால்களும் உள்ளன. உதாரணமாக, இதற்கு அதிக நேரமும் முயற்சியும் தேவைப்படலாம்.**

## பன்மொழி மற்றும் இருமொழிக் குழந்தையை வளர்ப்பதன் பலன்கள்

பன்மொழி அல்லது இருமொழிக் குழந்தை வளர்ப்பு உங்கள் குழந்தைக்கு மட்டுமல்ல, உங்கள் குடும்பத்துக்கும் சமூகத்துக்குமே நல்லது.

**குழந்தைகள்: பன்மொழியம் மற்றும் இருமொழியத்தின் பலன்கள்**
குழந்தைகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைப் பேசுவது பெரும்பாலும் எதனோடு தொடர்புடையதெனில்:

- சிறந்த கல்விசார் விளைவுகள் - இதற்குக் காரணம் பன்மொழி அல்லது இருமொழிக் குழந்தைகளால் நன்கு கவனம் செலுத்த முடியும். சிக்கல்களைத் தீர்ப்பதில் சிறந்தும், மொழியமைப்பை நன்கு புரிந்துகொள்ளக்கூடியவர்களாகவும் ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்வதில் சிறந்தும் விளங்குகிறார்கள்
- வாழ்க்கையில் மேலும் பன்முகத்தன்மையுடனும் ஆர்வமூட்டும் தொழில்-வேலை வாய்ப்புகளை பெறக்கூடியவர்கள்.

**மேலும், உங்கள் குழந்தை ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிகளைப் பேசி வளர்ந்தால், அவர்களுக்கு சுயமரியாதை, அடையாளம் மற்றும் பண்பு சிறந்து விளங்க வாய்ப்புள்ளது.** இது எதிலிருந்து வருகிறதெனில்:

- தங்கள் மரபு குறித்து நல்லுணர்வு


© Raising Children Network

- வேறுமொழி பேசுவோரிடமும் தூரத்து சொந்தங்களைத் தொடர்புகொள்வதிலும் இணைந்துகொள்வதிலும் நம்பிக்கையாக உணர்தல்
- இசை, திரைப்படங்கள், இலக்கியம் மற்றும் பலவற்றில் ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் இரசனை ஏற்படுதல்.

**குடும்பங்கள்: பன்மொழியம் மற்றும் இருமொழியத்தின் பலன்கள்**
உங்கள் குடும்பத்துக்கு, பன்மொழியமும் உங்கள் குழந்தையிடம் உங்கள் மொழியை மேம்படுத்துவதும்:

- உங்கள் குடும்ப உறுப்பினர்களிடையே செய்தித்தொடர்பை மேம்படுத்துகிறது
- உணர்வுப்பூர்வப் பிணைப்பை அதிகரிக்கிறது
- உங்கள் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக இருப்பதை உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் எளிதாக்குகிறது
- உங்கள் குடும்பத்தின் கலாச்சார அடையாளம் மற்றும் பண்புணர்வை வளர்க்கிறது.

**சமூகங்கள்: பன்மொழியம் மற்றும் இருமொழியத்தின் பலன்கள்**
உங்கள் பரந்த சமூகத்துக்கு ஒரு குழந்தை ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிகளைப் பேசுகிறது என்பது:

- சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும் வெவ்வேறு மொழிகள் மற்றும் கலாச்சாரங்கள் குறித்து சிறப்பாக போற்றப்படுகிறார்கள்
- குழந்தைகள் வளரும்போது அவர்களால் மேலும் எளிதாக பயணிக்கவும் வெவ்வேறு நாடுகளில், கலாச்சாரங்களில் பணியாற்றவும் முடிகிறது
- குழந்தைகள் பிற கலாச்சாரங்களைப் புரிந்துகொள்ளவும் போற்றவும் செய்கிறார்கள்.

## பன்மொழி மற்றும் இருமொழிக் குழந்தைகளை வளர்ப்பதில் ஏறபடக்கூடிய சவால்கள்

பன்மொழி அல்லது இருமொழிக் குழந்தைகளை வளர்ப்பதில் **ஆங்கிலம் மட்டும் பேசுவதற்கான அழுத்தம்** உட்பட அதற்கான சவால்களும் உள்ளன. இதற்கு அதிகளவு உழைக்க வேண்டியிருக்கும். இதுவொரு நீண்டகால அர்ப்பணிப்புப் பணி.

உதாரணமாக, பன்மொழி அல்லது இருமொழிக் குழந்தையை நீங்கள் வளர்க்கும்போது நீங்கள் செய்யவேண்டியது:

- ஆங்கிலத்தைத் தேர்ந்தெடுக்கும்படி அழுத்தம் இருந்தாலும் உங்கள் மரபு மொழியுடன் ஒட்டியிருத்தல்
- உங்களுக்கு நீங்களாகவும் உங்கள் குழந்தையையும் உங்கள் மரபு மொழிகளைப் பயன்படுத்த ஊக்கப்படுத்துதல்
- உங்கள் குழந்தைக்கு பன்மொழியம் மற்றும் இருமொழியத்தின் பலன்களைப் புரிந்துகொள்ள உதவுதல்
- உங்கள் குழந்தை தங்களது இரண்டாவது மற்றும் பிற மொழிகளைக் கேட்கவும் பயன்படுத்தவுமான அதிக வாய்ப்புகளைப் பெறும்படி செய்தல்
- உங்கள் குழந்தையின் ஆசிரியர்களுடன் பேசி உங்கள் முயற்சிகளுக்கான ஆதரவைப் பெறுதல்


© Raising Children Network

- உங்களுக்காக உதவி பெறுதல் - உதாரணமாக, பன்மொழி அல்லது இருமொழிக் குழந்தைகளை வளர்க்கும் நண்பர்கள் மற்றும் குடும்பத்துடன் பேசுங்கள்; உங்கள் சமூகத்தில் இருமொழி விளையாட்டுக் குழுக்கள் போன்ற வளங்களைக் கண்டறியுங்கள்.

சிலநேரங்களில் இந்தச் சவால்கள் மிகவும் கடுமையானதாகத் தோன்றினால், பன்மொழியத்தின் பலன்கள் குறித்து சிந்தித்துப் பார்ப்பது உதவிகரமாக இருக்கும் - குறிப்பாக உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் வலுவான குடும்பப் பிணைப்பை மேம்படுத்த உதவும் வழி. உதவியை, ஆலோசனையை, அனுபவங்களை பிற குடும்பங்களுடன் பகிர்ந்து கொள்வது பேருதவியாக இருக்கலாம்.

## பன்மொழியம் மற்றும் இருமொழியம்: அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

**மொழிகளுக்கிடையிலான வேறுபாடுகளை குழந்தைகளால் புரிந்துகொள்ள முடியுமா?**
இளவயதிலேயே குழந்தைகளால் மொழிகளுக்கிடையிலான வேறுபாடுகளைப் புரிந்துகொள்ளவும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளை ஒரே நேரத்தில் கற்கவும் முடியும். உதாரணமாக, பாட்டியிடம் ஜெர்மன் மொழியிலும் ஆசிரியருடன் ஆங்கிலத்திலும் பேசவேண்டுமென்பதை அவர்கள் மிக விரைவில் உணர்ந்துகொள்கிறார்கள்.

**குழந்தைகள் ஆங்கிலம் கற்பதை பன்மொழியமும் இருமொழியமும் எவ்வாறு பாதிக்கின்றன?**
பெற்றோர்கள் குறைந்தளவு ஆங்கிலப் புலமை உள்ள குடும்பங்களிலிருந்து வரும் குழந்தைகள், அந்தக் குடும்பத்தில் குடும்ப மொழிகளில் பேசிவந்தால் பள்ளிக்கூடத்தில் ஆங்கிலத்தை சிறப்பாகக் கற்றுக் கொள்கிறார்கள். இதற்குக் காரணம் தங்கள் முதலாவது மொழியில் வலுவான அடித்தளம் இருப்பதால் இரண்டாவது மொழியைக் கற்பதை அது அவர்களுக்கு எளிதாக்குகிறது.

**பன்மொழியமும் இருமொழியமும் எவ்வாறு எழுத்தறிவுத் திறன்களைப் பாதிக்கிறது?**
பன்மொழி மற்றும் இருமொழிக் குழந்தைகள் ஒரு மொழிக்குமேல் எழுதக் கற்கும்போது - உதாரணமாக ஸ்பானிய மொழியும் ஆங்கிலமும் - அல்லது வெவ்வேறு எழுதும் முறைகளில் - உதாரணமாக, சீனமொழியும் ஆங்கிலமும் - ஆங்கிலத்தை உயர்மட்ட அளவில் அவர்களால் வாசிக்கவும் எழுதவும் முடிகிறது. ஆங்கிலம் மட்டும் பேசக்கூடிய தங்களுக்கு இணையானவர்களைக் காட்டிலும் இவர்களுக்கு வார்த்தைகள் எப்படி இருக்கின்றன எப்படி ஒலிக்கின்றன என்பவற்றுக்கிடையிலான தொடர்பு குறித்த புரிதல் சிறப்பாக இருக்கிறது.

**பன்மொழியமும் இருமொழியமும் எவ்வாறு பேச்சு வளர்ச்சியைப் பாதிக்கிறது?**
எல்லாக் குழந்தைகளுக்கும் பேச்சு வளர்ச்சி வெவ்வேறு வீதத்தில் இருக்கும். ஒரேநேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைக் கற்றுக்கொள்வது எத்தனை சீக்கிரம் அல்லது விரைவாக உங்கள் குழந்தை பேசக் கற்றுக் கொள்கிறது என்பதைப் பாதிக்காது. சிலநேரங்களில் பன்மொழி அல்லது இருமொழிக் குழந்தைகள் சிறிதுகாலத்திற்கு தங்கள் மொழிகளைக் கலந்து பேசுவார்கள். ஆனால் அவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைப் பயன்படுத்துவதைப் புரிந்துகொண்டபின் அவர்கள் இதைச் சரிசெய்து கொள்வார்கள்.


© Raising Children Network